**தலைப்பு 268 - மாவட்டச் செயலகம், கிளிநொச்சி**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடக்கிய பொழிப்பு அறிக்கை 2020 மே 30 இல் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டிருந்தது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூன் 24 இல் வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக்குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் நிதி நிலமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலமையைப் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை வடிவமைத்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் மாவட்டச்செயலகத்தில் வருமானங்கள், செலவினங்கள்,

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை உரிய வகையில் பேணிச் செல்லல் வேண்டும்.
தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து தவிர்க்கப்பட்டுள்ளது என்பதற்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையினை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டுச்சேரல், தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாவட்ட செயலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதனை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் யாவும் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்காமை

2019 திசெம்பர் 03 ஆம் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அத்தேவைப்பாடுகளிலிருந்து விலகியிருந்த சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிச்செயலாற்றல் கூற்றின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களின் மீதி ரூபா 1,265,867,150 ஆக காணப்பட்டுள்ள போதிலும் திறைசேரி புத்தகத்தின் படி மீதி ரூபா 1,264,194,405 ஆக காணப்பட்டதினால் இவ் இரண்டிற்குமிடையிலான வேறுபாடாக ரூபா 1,672,745 தொகை காணப்படுகின்றது. | Cigas பொதியில் காணப்படும் மீதியே சரியானது இது தொடர்பாக சீராக்கங்கள் மேற்கொள்ள திறைசேரியிடம் கோரப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களை தயாரித்து சமர்ப்பிக்கப்படும் போது அனைத்து மீதிகளும் இணங்கப்பட்டிருத்தல் வேண்டும் |

#### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) வருமானங்களின் பெறுவனவு**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **கூட்டிக்காண்பித்தல்** | | |
| 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய | நிதிக்கூற்று தயாரித்தலின் | அரசநிதிச் சுற்றறிக்கையின் |

| | | |
|---|---|---|
| 271/2019 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 7(ii) ஆம் பந்திக்கு முரணாக நிதிச் செயலாற்றுகை கூற்றில் (ACA-1) இல் காட்டப்பட்டுள்ள ரூபா 111,719,283 பெறுமதியானது வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தருக்காக வருமானத்தை திரட்டுகின்ற ஏனைய திணைக்களங்களுக்குரிய வருமானங்களினை திரட்டப்பட்ட வருமானத்தை திறைசேரியிடமிருந்து கிடைத்த கட்டு நிதியாகக் கருதி ஏசீஏ-3 இல் சேர்த்துக் காட்டப்பட்டிருக்கவில்லை. | போது உரிய ஏசீஏ - 3 இல் காட்டப்படவில்லை. இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் இடம்பெறாது. | பிரகாரம் கணக்கறிக்கைகள் தயாரிக்கப்படல் வேண்டும் |

**(ஆ) மீண்டெழும் செலவினங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீண்டெழும் செலவின விடயங்களின் கீழ் பொறுப்புக்களையும் கடப்பாடுகளையும் தேறிய ஏற்பாடுகளையும் ஒப்பீடும் போது 02 செலவினத்தலைப்பு விடயங்களுக்கு ரூபா 218,317 தேறிய ஏற்பாடுகளுக்கு மேலான பொறுப்புக்களின் கடப்பாடுகள் மிகையாக காணப்படுகின்றன. | சீர்செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது | ஏற்பாடுகளுக்கு அமைய செலவினம் மேற்கொள்ள வேண்டும் |

**(இ) மூலதன செலவீனம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 05 மூலதனச் செலவின விடயங்களின் மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 184,100,000 ஆகவும் மொத்த செலவினமானது ரூபா 23,209,468 ஆகவும் காணப்பட்டதின் விளைவாக மூலதன செலவின விடயங்களின் சேமிப்பு ரூபா.160,890,532 காணப்படுகின்றன. இவ் சேமிப்பானது கட்டுநிதிப் பற்றாக்குறை காரணமாக எழுந்துள்ளது. | திறைசேரியிடமிருந்து போதுமான அளவு கட்டுநிதி கிடைக்காமையினால் சேமிப்பு ஏற்பட்டுள்ளது. | அரசநிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

**(ஈ) அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் பதவியிலிருந்து விலகிய, நீக்கப்பட்ட மற்றும் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை ரூபா 644,195 இனை 10 வருடங்களுக்கு மேலாக அறவிட்டுக்கொள்வதற்கு இற்றைவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொது நிதிகள் திணைக்களத்திற்கு பதிவழித்தல் நடவடிக்கைக்காக ஆவணங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. | நிலுவை மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

**(உ) வைப்புக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் இரண்டு வருடங்களிற்கு மேற்பட்ட ரூபா 5,424,688 கூட்டுத்தொகையான வைப்புக்கள் தொடர்பில் நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரியவர்களிற்கு வழங்குவதற்கு அல்லது அரச வருமானக் கணக்கிற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது | நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் செயற்படல் வேண்டும் |
| (ii) | 2015 ஆம் ஆண்டில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவில் தேசிய நீர்வழங்கல் செயற்திட்ட காணி கொள்வனவிற்காக வழங்கப்பட்ட ரூபா 2,151,030 தொகையானது கடந்த 4 வருடங்களாக உரிய நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாது மீளாய்வாண்டு இறுதி வரை வைப்புக்கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. | ஜனவரி மாதம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் செயற்பட வேண்டும் |

**(ஊ) கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் கணக்காய்வுச் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | மூலதன வேலைத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டதாக கடப்பாடு மற்றும் பொறுப்புக்கள் பற்றிய கூற்றில் செலுத்தப்பட வேண்டியதாக காட்டப்பட்டிருந்த மூலதன வேலைத்திட்டங்கள் வேலை நிறைவேற்றத்திற்கான உறுதிச்சீட்டு, வேலை நிறைவேற்று அறிக்கை, கணியச்சிட்டை, என்பன கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையால் மீளாய்வு ஆண்டிற்கான ரூபா 13,939,386 பெறுமதியான 03 மூலதன வேலைக்கான கொடுப்பனவுகளை கணக்காய்வில் சான்றுறுதிப்படுத்த முடியாமல் உள்ளது. | 02 வேலைகளுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன. மிகுதி கொடுப்பனவுகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | செலவினங்களுக்குரிய உறுதிச்சீட்டுக்களும் இணைப்புக்களும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ii) | பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தினால் ரூபா 3,428,251 பெறுமதியான 36 கொடுப்பனவுகளுக்கு காசுப்பற்றுச்சீட்டு, பெறுநர் ஒப்பம் மற்றும் கொடுப்பனவுக்கான நோக்கம் என்பன குறிப்பிடப்பட்டிருக்காமையினால் கொடுப்பனவுகளை கணக்காய்வில் சான்றுறுதிப்படுத்த முடியாதுள்ளது. | தவறுகள் அனைத்தும் சீர் செய்யப்பட்டுள்ளன. இனி வரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் இடம்பெறாது. | கொடுப்பனவுகளுக்கான கணக்காய்வுச் சான்றுகள் இணைக்கப்படல் வேண்டும் |

**(எ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக்கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| | அவதானிப்புக்கள் | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி (ரூபா) | இணங்காமை | | |
| (i) | நிதி திட்டமிடல் அமைச்சின் 2012 ஜனவரி 05 ஆம் திகதிய அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 01/2012 இன் 3.2 ஆவது பிரிவின் (iv) | 2,000,000 | சமூக அடிப்படையிலான நிறுவனங்களுக்கு நேரடியாக ஒப்பந்தங்களை வழங்கும் திட்டத்தில் உருத்துடைய வேலைகள் துணை ஒப்பந்தங்கள் வழங்கப்படமாட்டாது எனக் குறிப்பிடப்பட்டிருந்தும் கரைச்சி பிரதேச செயலக திருவையாறு மைதான வீதி வேலைத்திட்டமானது திருவையாறு கிராம அபிவிருத்தி சங்கத்தினால் தனியார் ஒப்பந்ததாரருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. | உபஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்ட மைக்கான ஆவணங்கள் எதுவும் காணப்படவில்லை என கிராம அபிவிருத்தி அலுவலரால் தெரிவிக்கப் பட்டுள்ளது. | உப ஒப்பந்தம் வழங்கப்பட்டமைக்கான உரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப் பட்டுள்ளதால் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படல் வேண்டும் என தங்களிற்கு அறிவிக்கப்படுகின்றது. |
| (ii) | அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 09/2009 இலக்க (iv) மற்றும் (v) | 28,293 | பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தினால் விடுமுறை நாள் கொடுப்பனவுகள் விரலடையாள பதிவின்றி வழங்கப்பட்டிருந்தன. | இனி வருங்காலங்களில் இவ்வாறான தவறுகள் இடம்பெறாது | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும் |
| (iii) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக்கோவை XIX இன் பிரிவு 5.8 | 52,000 | அலுவலர் கூட்டு அரச விடுதி பயன்பாட்டு மின்கட்டணமானது அலுவலகர்களினாலேயே செலுத்தப்பட வேண்டியிருந்தும் மின்கட்டண நிலுவை மாவட்ட செயலக நிதியிÇடாக செலுத்தப்பட்டிருந்தது. | உரிய அலுவலகர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது | தாபன விதிக்கோவைக்கு அமைய நிலுவை மின்கட்டணத்தை உரிய உத்தியோகத்தரிடமிருந்து அறவிடல் வேண்டும் |
| (iv) | நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் கைÁல் (CIDA) இன் 2007 சனவரி 2 ஆம் | 368,929 | பள்ளிக்குடா வளர்மதி இறங்குதுறை ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்தக் கொடுப்பனவுகளை மேற்கொள்கின்ற போது முடிவுறுத்தப்படாத ஒப்பந்த | இனிவருங்காலங்களில் வேலை முடிவுறுத்தலால் ஏற்படுகின்ற நிதியிழப்புகளை கணிப்பீடு செய்து | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| பதிப்பின் பொதுஏற்பாடு 1 இன் இல.11.1, 11.3, 11.4 | வேலையில் 20 வீதம் கழிவீடு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்ட வேலைக்கான கொடுப்பனவு வழங்கப்பட்டிருக்கவில்லை. | கழிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஏ) முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தினால் ரூபா 120,000 பெறுமதியான கொடுப்பனகளிற்கு நிதிப்பிரமாணம் 137 இற்கமைய முறையான அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 137 இற்கமைய கொடுப்பனவு மேற்கொள்ள முன்பு அங்கீகாரம் பெறப்படல் வேண்டும் |
| (ii) | பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் ரூபா 35,000 பெறுமதியான கொடுப்பனவு நிதிப்பிரமாணம் 138 இற்கமைய உறுதிச்சீட்டுக்கள் சான்றுறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உறுதிச்சிட்டை சான்றுறுதிப்படுத்தப்பட் டுள்ளது. | நிதிப்பிரமாணம் 138 இற்கமைய கொடுப்பனவு மேற்கொள்ள முன்பு உறுதிச்சீட்டுக்கள் சான்றுறுதிப்படுத்தல் வேண்டும் |

## 2. நிதி முகாமைத்துவம்

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது மாவட்ட செயலகத்தினால் கட்டுநிதிக்காக ரூபா 6,582,938,000 விற்கு கோரிக்கை விடப்பட்டிருந்த போதிலும் ரூபா 2,240,660,000 கட்டுநிதியே பெறப்பட்டிருந்தது. ரூபா 1,343,731,000 பெறுமதியான கட்டுநிதியானது நிதியாண்டில் பெறப்பட்டிருக்கவில்லை. இதனால் நிறைவேற்றப்பட்ட மூலதன வேலைக்கான கொடுப்பனவுகளை | நிதியாண்டில் காணப்பட்ட கட்டுநிதி பற்றாக்குறை காரணமாக கையிருப்பில் இருந்த உறுதிச்சிட்டைகள் பொறுப்பாக காட்டப்பட்டுள்ளன. | முறையாக கட்டுநிதி திட்டமிடப்பட்டு குறித்த கட்டுநிதியை உரிய காலத்தில் பெறுவதற்கான நடவடிக்கை நேர்கொள்ளப்பட வேண்டும். |

மேற்கொள்ள முடியாமல் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளின் கணக்குகளில் ரூபா 15,460,013 பெறுமதி கூடுதலாக காட்டப்பட்டிருந்தது.

**2.2 வங்கிக் கணக்குகளை செயற்படுத்தல்**

வங்கிக்கணக்குகள் செயற்படுத்துவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப்பரிசோதனையின் போது கண்டறியப்பட்ட குறைபாடுகள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கண்டாவளை பிரதேச செயலக கட்டட நிர்மாண வேலை நிறைவேற்றலுக்காக செலுத்தப்பட வேண்டிய ரூபா. 8,757,467 பெறுமதியான இரு காசோலைகள் கடந்த 03 வருடங்களாக கொடுப்பனவுகள் எதுவும் மேற்கொள்ளப்படாது மாற்றப்படாத காசோலையாக மீளாய்வாண்டு இறுதி வரை காணப்படுகின்றது. | 2020 பெப்ரவரி அரச வருமானக்கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயற்படல் வேண்டும். |

**2.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்டுள்ள நிதியேற்பாட்டின் பயன்பாடு**

மீள்குடியேற்றம் புனர்வாழ்வளிப்பு வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் நிதியின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட உற்பத்தி கூட்டுறவு கருத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்களை கணக்காய்வு செய்த போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) **செயற்திட்டத்தின் சொத்துக்களின் குறைப்பயன்பாடு / விளைவற்ற வகையில் காணப்படல்** | | |
| 04 பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கட்டடங்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 28,756,571 கடந்த 1 தொடக்கம் 2 வருடங்களுக்கு மேலாக உரிய நோக்கங்களிற்கு பயன்படுத்தப்படாது பயன்பாடின்றி காணப்படுகின்றது. | உற்பத்தி நிலையங்களை இயங்க வைப்பதற்கான பொறுப்பு உரிய பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு உள்ளது. இது தொடர்பாக உரியவர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. | பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கரைச்சி வடக்கு பலநோக்கு கூட்டுறவுச்சங்க அரிசி ஆலை கட்டட திருத்தம் தொடர்பான விலைக்கேள்வி மனுவில் இலக்கம் 09 மற்றும் 12 உருப்படிகளுக்கு விலைக்கேள்வி ஆவணம், தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு, பெறுகைக்குழு தீர்மானங்களில் காட்டப்பட்ட பெறுமதிக்கு மேலதிகமாக ரூபா 350,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | உருப்படி 9, 12 தொடர்பில் கூறுவிலையில் குறிப்பிடப்பட்டது ஒரு பொருளுக்கான விலையிடலாகும். அதற்காகவே குறித்த கொடுப்பனவு இடம்பெற்றுள்ளது. | மேலதிக கொடுப்பனவு கணிப்பீடு செய்யப்பட்டு பொறுப்பான அலுவலர்களிடமிருந்து அறவீடு செய்யப்பட வேண்டும் |
| (இ) | கரைச்சி வடக்கு பலநோக்கு கூட்டுறவு சங்க அரிசி ஆலையை இயக்குவதற்கு ரூபா 2,001,500 பெறுமதியான இயந்திர உபகரணங்கள் கடந்த 02 வருடங்களிற்கு மேலாக கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டிருந்தும் உட்கட்டமைப்பு வசதிகள் செய்யப்படாமலுள்ளதுடன் உபகரணங்கள் பயன்பாடற்றும் காணப்படுகின்றது. | குறித்த ஆலைக்கான மேலதிக தேவைப்பாடுகளையும் மின்சார இணைப்பையும் குறித்த சங்கத்தினால் வழங்கப்படல் வேண்டும் என்ற அடிப்படையில் கருத்திட்டத்திற்கு நிதியீட்டம் செய்யப்பட்டது. சங்கத்தின் நிதியின்மை காரணமாக உரிய இணைப்பு பெற்றுக்கொள்ளப்பட்டிருக் கவில்லை. | இவ்வாறான செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது உட்கட்டமைப்பு வசதிகளை கருத்தில் கொண்டு செயற்படல் வேண்டும் அத்துடன் அரிசி ஆலையை இயக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | ரூபா 1,468,000 பெறுமதியான தேங்காய் உலர்த்தும் இயந்திரமானது வழங்குனரினால் விநியோக காலம் முடிவடைந்து 04 மாதங்களாகியும் பச்சிலைப்பள்ளி பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | வழங்குனரான ISF நிறுவனம் விரைவாக வழங்கலை பூர்த்தி செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். | ஒப்பந்தத்தின் பிரகாரம் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |
| (உ) | 2006 ஆம் ஆண்டின் பொருள் மற்றும் வேலைக்கான வழிகாட்டி 5.4.8 இன் பிரகாரம் பொருட்கொள்வனவின் போது 10 வீதம் செயல்நிறைவேற்ற பிணைப்பொறுப்பு பெற்றுக்கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தும் உபகரணக் கொள்வனவுகளில் 5 வீதமான ரூபா 552,574 பெறுமதியான பிணைப்பொறுப்புக்களே பெறப்பட்டிருந்தது. | இனிவரும் காலப்பகுதியில் 10 வீதம் ஆன பெறுமதியில் செயல்நிறைவேற்ற பிணைப்பொறுப்பு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் செயற்படல் வேண்டும் |
| (ஊ) | பச்சிலைப்பள்ளி பலநோக்கு கூட்டுறவு சங்க எண்ணை உற்பத்தி ஆலைக்கான உபகரணங்கள் கருத்திட்ட முன்மொழிவில் திட்ட செலவீனங்களில் சங்கத்தினால் கோரப்படாத இயந்திர உபகரணங்கள் | குறித்த கருத்திட்டம் தொடர்பாக பெருள் வழங்கல் தீர்மானம் பெறப்பட்ட போது கடந்த காலங்களில் வழங்கப்பட்டதாக | பொறுப்வாய்ந்த உத்தியோகத்தரினால் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 1,837,500 பெறுமதிக்கு கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளமையால் உபகரணங்கள் அவசியமற்றதாகவும் பயன்பாடின்றியும் காணப்படுகின்றது. | தெரிவிக்கப்படும் பெருட்கள் தற்போது கொள்வனவு கட்டளையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | உபகரணங்களை பயன்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (எ) | உற்பத்தி கூட்டுறவு கருத்திட்டத்திÇடாக கரைச்சி, பச்சிலைப்பள்ளி, கரைச்சி தெற்கு மற்றும் கிளிநொச்சி மாவட்ட பலநோக்கு கூட்டுறவு சங்கங்களுக்கு அரிசி ஆலை, எண்ணெய் ஆலை மற்றும் சேதனப்பசளை உற்பத்திக்கு ரூபா 15,043,033 பெறுமதியில் கொள்வனவு செய்து வழங்கப்பட்ட உபகரணங்கள் 2006 பெறுகை வழிகாட்டி 8.12.3(இ) இற்கமைய கொள்வனவு செய்த உபகரணத்தொகுதிகளுக்கும் பண்டங்களுக்கான உடன்பட்டுக்கொண்ட உத்தரவாதங்களும் (Warranty), கைÁல்களும் (Guide Lines Cately) பெற்றுக்கொண்டமையை உறுதிப்படுத்தி பொறுப்பான அலுவலரினால் வழங்குனருக்கு உபகரணக் கொள்வனவுக்கான உத்தரவாதம் மற்றும் கைÁல்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை பண்டங்களுக்கான உத்தரவாதங்களும் கைÁல்களும் குறித்த வழங்குனரிடம் பெற்று வழங்கப்பட்டுள்ளதுடன் மேலும் சில வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |
| (ஏ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 2008 ஜனவரி 25 ஆம் திகதிய 1533/16 இலக்க அதிவிசேட வர்த்தமான பத்திரிகையில் 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சூழல் சட்டத்தின் 23(அ) பிரிவின் கீழான கட்டளையின் பாகம்(அ) இன் பிரகாரம் சூழல் பாதுகாப்பு உரிமம் பெறப்பட்டிருககாது சேதனப் பசளை உற்பத்திக்கு ரூபா 6,628,500 பெறுமதியில் கட்டிடம் இயந்திரம் வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 50 மீற்றர் Àரத்தில் மக்கள் குடியிருப்புக்கள் காணப்படுகின்ற போதும் பொதுமக்களின் சுகாதார பாதுகாப்பு கருத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | குறித்த உரிமம் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கத்தினால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் சுற்றுச்சூழல் அதிகார சபையுடன் கலந்துரையாடி மேலதிக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் . | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்டத்தை பூர்த்தி செய்யாமல் கைவிடுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மாவட்ட செயலகத்தினால் இறங்குதுறை ஆழமாக்கல் திட்டம் தொடர்பாக ரூபா. 4,660,303 பெறுமதியான 02 வேலைத்திட்டங்கள் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு உரிய வேலைத்திட்டத்திற்கான உபகரணங்கள் இன்மையால் மேற்கொள்ளப்பட்ட வேலைக்காக ரூபா.1,650,585 செலுத்தப்பட்டு வேலையானது ஒப்பந்தகாரரினால் கைவிடப்பட்டிருந்தது. | ஒப்பந்ததாரர் தெரிவு திறந்த கேள்வி கோரல் மூலம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபார்சிற்கமைய ஒப்பந்ததாரர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். | சட்ட விதிமுறைக்கமைய அனுமதியினை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். அத்துடன் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

### 3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் கால தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மாவட்ட செயலகத்தினால் ரூபா 14,252,741 பெறுமதியான 3 வேலைத்திட்டங்கள் 2019 திசெம்பர் மாதம் நிறைவேற்றப்பட்டிருக்கப்பட வேண்டிய போதும் அறிக்கையிடும் திகதி வரை வேலைகள் எதுவும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | 02 வேலைத்திட்டங்கள் 75 வீதமான வேலைகளே முடிவுற்றுள்ளது. மிகுதி வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. | வேலைத்திட்டங்கள் யாவும் ஒப்பந்த காலத்தினுள் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.3 ஏனைய அவதானிப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கடந்த ஆண்டின் செயலாற்றல் அறிக்கையில் பிழையான தகவல்கள் காட்டப்பட்டமையால் 2019 ஆம் ஆண்டில் சமுர்த்தி பயனாளிகளின் எண்ணிக்கை 24,114 ஆக அதிகரிக்கப்பட்டிருந்தது. | வறுமை நிலையில் உள்ள குடும்பங்களை இனங்காணப்பட்டு திட்டத்தில் உள்வாங்கப்பட்டது. | செயலாற்றல் அறிக்கையினுள் பொருத்தமான தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும். |

**3.4 பெறுகை**

--------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் மூலதன செலவின் ரூபா 5,492,500 பெறுமதியான கீழ் 06 வேலைத்திட்டங்கள் தேசிய போட்டி விலைக்கேள்வியிடூாக நிறைவேற்றப்படும் என பெறுகை திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தும் கிராம மட்ட நிறுவனங்களிடூாக நேரடியான ஒப்பந்தளிப்பிடூாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. | தேசிய போட்டி விலைக்கேள்வியினூடகவே மேற்கொள்வதாக இருந்தபோதும் வேலைத்திட்டத்தின் பெறுமதியையும் காலத்தையும் கருத்தில் கொண்டு கிராம மட்ட நிறுவனங்களினூடாக ஒப்பந்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இனிவருங்காலங்களில் இவை கருத்தில் எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். | பெறுகை வழிகாட்டிக்கமைய செயற்பட வேண்டும். |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டில் ரூபா 757,500 பெறுமதியில் முடிவடைந்த திறன்விருத்தி நிலைய கிணறு அமைத்தல் வேலையானது 2019 ஆம் ஆண்டின் பெறுகைத்திட்டத்தினுள் உள்வாங்கப்பட்டுள்ளது. | 2018 ஆம் ஆண்டில் ஒதுக்கீடுகளுகள் காணப்படாமையினால் 2019 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டிலேயே கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது. | பெறுகைத்திட்டத்தில் நிறைவேற்றப்படாத வேலைகள் அடுத்த ஆண்டு திட்டத்திற்கு உள்வாங்க வேண்டும். |
| (இ) | விநாயகபுரம் விவசாயிகள் கூட்டுறவு சங்கத்தின் பழங்கள், மரக்கறிகள் பதனிடல் தொழிற்சாலைக்கு பெறுகை குழு மற்றும் தொழில்நுட்ப குழு தீர்மானத்திற்கு மாறாக ரூபா 11,595,798 பெறுமதியான Dryer மற்றும் மின்பிறப்பாக்கி உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டிருந்தன. | தொழில்நுட்ப தகுதிச்சான்றுகள் இதுவரை வழங்கப்படாது உள்ளதனாலும் தொழில்நுட்ப தேவைப்பாடுகளை இன்னும் நிறைவேற்ற வேண்டியிருப்பதனாலும் முழுமொத்த பெறுகையும் இதுவரை பூர்த்தி அடையவில்லை. | தொழில்நுட்பகுழுவின் வேண்டுகைக்கமைய இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டும் |
| (ஈ) | உற்பத்தி கூட்டுறவு கருத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட மீன்பதனிடல் உற்பத்தி நிலையத்திற்கு மீன் பதனிடல் உபகரணங்கள் ரூபா 9.75 மில்லியன் பெறுமதியில் கொள்வனவு | தொழிற்சாலையை இயக்குவதற்கான தனியான வர்த்தக இணைப்பு ஒன்றை குறித்த சங்கம் மின்சார சபையிடம் கோருவதற்கு நிதி நிலைமையின்மையால் | உட்கட்டமைப்பு வசதிகளை கருத்தில் கொண்டு பொருட்களை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் இயந்திரத்தினை |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்டு இயக்கத்திற்கு 100 அம்பியர் அளவுடைய மூன்று மின் இணைப்பு மின்சாரம் தேவைப்படுவதாக கோரப்பட்டமைக்கு கிளிநொச்சி மாவட்ட மின்வழங்கல் 60 அம்பியர் ஆக இருப்பதினால் கொள்வனவு செய்த இயந்திரம் இயக்க முடியாத நிலையில் 01 வருடமாக காணப்படுகின்றது. | தேவை பூர்த்தி செய்யப்படாது உள்ளது. | இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் குடிநீர் வழங்கும் செயற்திட்டத்திற்காக 2019 பெப்ரவரி மாதம் கரைச்சி பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்ட WPLO - 2978 இலக்க தண்ணீர் தாங்கி விநியோக வாகனம் மற்றும் (Lorry Bowser) வழங்கப்பட்டிருந்தும் 01 வருடமாக பயன்பாடின்றி காணப்படுகின்றது. | வாகனத்தை பயன்படுத்த வேண்டிய தேவை ஏற்படவில்லை. கரைச்சி பிரதேச செயலகத்தில் நிறுத்துவதற்குரிய இடவசதியின்மையும் காணப்படுகின்றது. | பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |
| (ஆ) | மாவட்ட செயலக களஞ்சியத்தில் உலக உணவு திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட 05 எண்ணிக்கையான மோட்டார் வாகனங்கள் உரிமை மாற்றம் செய்யப்படாது 03 வருடங்களாக காணப்படுகின்றது. | விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட கலந்துரையாடப்பட்டு ள்ளது. | உரிமை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |
| (இ) | நீர்ப்பாசன நீர்வழங்கல் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் 2018 ஆம் ஆண்டில் வரட்சி குடிநீர் விநியோகத்திற்கு வழங்கப்பட்ட 1000 லீற்றர் அளவுடைய 50 நீர்த்தாங்கிகள் மற்றும் நன்கொடையாகப் பெறப்பட்ட 40 தண்ணீர் வடிகட்டல் இயந்திரம் ஒரு வருடத்திற்கு மேலாக பயன்பாடின்றி காணப்படுகின்றது. | தேவைக்கு ஏற்ப முன்னுரிமை அடிப்படையில் விநியோகிக்கப்படவுள் ளதுடன் xU thu fhyj;jw;Fs; Fwpj;j tbfl;ly; ,ae;jpuk tpepNahfpf;fg;gLk; | பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.6 நட்டங்களும் சேதங்களும்

| கணக்காய்வு அவதானிப்புகள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களினால் மேற்கொள்ளப்பட்ட 05 வேலைத்திட்டங்கள் ஒப்பந்த காலத்தில் நிறைவேற்றப்பட்டிராமைக்கு ரூபா 956,911 காலதாமத தண்ட அறவீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தும் ஒப்பந்ததாரரிடமிருந்து அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | வீதியை மீள செப்பனிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் கடலை ஆழமாக்குவதற்கான உபகரணங்கள் காணப்படாமையால் ஒப்பந்த காலத்திற்குள் வேலை செய்துமுடிக்க முடியவில்லை. | காலதாமத தண்ட அறவீடு ஒப்பந்தத்தின் பிரகாரம் அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |
| (ஆ) | மாவட்ட செயலகத்தின் கீழான 05 வாகனங்கள் 2012 இலிருந்து 2018 காலங்களில் விபத்துக்குள்ளாகி ரூபா 2,816,237 பெறுமதிக்கு திருத்தம் மேற்கொள்ளப்பட்டு காப்புறுதி கம்பனியிடமிருந்து ரூபா 1,194,675 காப்புறுதி கட்டணம் மட்டுமே பெறப்பட்டிருந்தது. விபத்தினால் ஏற்பட்ட நட்டம் ரூபா 1,621,562 தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருககவில்லை. அத்துடன் மீளாய்வாண்டு நிதிக்கூற்றிலும் நட்டங்கள் காட்டப்பட்டிருக்கவில்லை. | தொடர்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

## 3.7 முகாமைத்துவ பலவீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 03 பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு நெற்கொள்வனவு செயற்பாட்டுக்காக வழங்கப்பட்ட ரூபா. 3.42 மில்லியன் முற்பணங்கள் | மாதாந்த அடிப்படையில் செலுத்தி முடிக்குமாறு அறிவுறுத்தல் | முற்பண நிலுவைகளை தீர்ப்பனவு செய்ய உடனடியாக நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | 7 வருடங்களுக்கு மேலாக தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | வழங்கப்பட்டுள்ளது. | எடுக்கப்படல் வேண்டும் |
| (ஆ) | கண்டாவளை பிரதேச செயலக கட்டட வேலை தொடர்பில் ஒப்பந்ததாரருக்கு செலுத்த வேண்டிய கொடுப்பனவுக்காக நடுவர் தீர்ப்புக்கான வழக்கிற்கு ரூபா 220,875 மாவட்ட செயலகத்தினால் மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது. 03 வருடங்களாக ஒப்பந்ததாரருக்கு செலுத்த வேண்டிய ரூபா 8,236,594 நடுவர் தீர்ப்பு முடிவிற்கு வராத நிலையில் 2020 பெப்ரவரி 17 ஆம் திகதி அரச வருமான தலைப்பிற்கு வருமானமாக மாற்றப்பட்டுள்ளது. | நடுவர் தீர்ப்பிற்கான வழக்கு காலதாமதமாவதால் காசோலை அரச வருமானக் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது. | நடுவர் தீர்ப்பிற்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

## 4. நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை அடைந்து கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகத்தால் இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களுக்குரிய இலக்குகள் 2020 ஏப்ரல் 30 ஆம் திகதி வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது | நிலைபேறான அபிவிருத்திக்குரிய இலக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும் |

## 5. நல்லாளுகை

### 5.1 பொதுமக்களுக்கான சேவைகளை நிறைவேற்றுதல்

பின்வரும் விடங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தினால் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியின் 2017 ஏப்ரல் 07 திகதியிடப்பட்ட 2017/5 சுற்றுநிருபத்திற்கமைய வங்கியின் அங்கத்தவர்களுக்கு எல்.பி.கேஸ் சிலிண்டர் தொகுதியை பெற்றுக்கொண்டமைக்காக 66 சிலிண்டர் மற்றும் 116 வவுச்சர்களிற்கும் ரூபா 662,194 பெறுமதியான அன்பளிப்புக்களை உரிய பயனாளிகளுக்கு வழங்கப்படாது | அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு ள்ளது. | தாபனவிதிக்கோவை யின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தர்கள் தாமே எடுத்துக் கொண்டுள்ளனர். | | |
| (அ) | தகவல் அறியும் சட்டத்தின் கீழ் 2019 ஆம் ஆண்டில் 02 சந்தர்ப்பங்களில் மேன்முறையீடு செய்யப்பட்ட தகவல்களிற்கு 2020 மே 22 ஆம் திகதி கணக்காய்வு திகதி வரை மாவட்ட செயலகத்தினால் மேன்முறையீட்டு அறிக்கை வழங்கப்பட்டிருக்கவில்லை. | தகவல் அறியும் சட்டத்தின் பிரகாரம் மேன்முறையீடு சமர்ப்பித்தவர்களிற்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 6. மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2001 ஆகஸ்ட் 22 ஆம் திகதிய 18/2001 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு சேவை நிலையத்திலும் சேவை புரியக்கூடிய ஆகக்கூடிய சேவைக் காலம் 05 ஆண்டுகளாகும். மாவட்டசெயலகத்தில் ஈடுபட்டுள்ள 46 உத்தியோகத்தர்கள் 06 ஆண்டு முதல் 21 ஆண்டுகள் வரை ஒரே சேவை நிலையத்தில் தொடர்ந்தும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |
| (ஆ) | வெற்றிடமாக உள்ள 76 ஆளணியினரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |